**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 26/2023**

09.07.2025

**<u>வா.சா.1 நடராஜன் த/பெ. வேணுகோபால் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

வழக்கானது என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் விஜயகுமாரிக்கு நான் கொடுத்த பணத்தை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் மாவட்ட கருவூலத்தில் பணிபுரிந்தேன். 31.08.2000 ல் ஓய்வு பெற்றேன். நான் ஓய்வு பெறும்போது என் மாத சம்பளம் எவ்வளவு என்றால் நினைவில்லை. தற்போது ஓய்வுதியம் ரூ. 55,000/- வாங்குகிறேன். நானும் என் மனைவியும் தான் தனியாக இருக்கிறோம். என் குழந்தைகளுக்கு தற்போது திருமணமாகிவிட்டது. நான் ஓய்வுபெற்றவுடன் நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறேன் என்றால் இல்லை. நான் 5 ரூபாய் வட்டிக்கு பணம் கொடுத்து வசூல் செய்வதற்காக காசோலை வழக்கு மற்றும் புரோநோட்டு வழக்கு என்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மன்னார்குடியிலும் இந்த நீதிமன்றத்திலும் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 20 – 30 நபர்களுக்கு 5 பைசா வட்டிக்கு பணம் கொடுத்து மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றதிலும் இந்த நீதிமன்றத்திலும் மற்றும் காசோலை மோசடி வழக்குகளை குற்றவியல் நீதிமன்றத்திலும் பல்வேறு வழக்குகளை தாக்கல் செய்து தற்போது வழக்குகளை தாக்கல் செய்யவில்லை என்று பொய்யாக சாட்சிய அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஓய்வுபெற்ற அரசு ஊழியர் என்பதாலும் லேவாதேவி தொழில் செய்வதற்கு முறையாக அனுமதி வேண்டும் என்றும் ஆனால் நான் அவ்வாறு எந்த அனுமதியும் பெறாமல் கந்துவட்டி தொழில் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி விஜயகுமாரியை எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்படி தெரியும் என்றால் நான் கருவூலஅதிகாரியாக இருக்கும்போது சம்பள பில்கள் தெடர்பாக சந்தேகம் கேட்கும்போது வரும்போது அந்த வகையில் பழக்கம். பிரதிவாதியை எனக்கு தெரியாது என்றாலும் வட்டிகொடுக்கும் தொழில் செய்துவந்து பிரதிவாதி தோழி மூலமாகதான் பிரதிவாதி எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. பிரதிவாதி தோழி மூலமாக தான் பிரதிவாதியை தெரியும் என்பதால் நாளை அவரை சாட்சியாக பிரதிவாதி விசாரித்துவிடுவார் என்று தெரிந்துகொண்டு பிரதிவாதியை எனக்கு நேரில் தெரியும் என்பது போன்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு மன்னார்குடியில் எத்தனை வங்கியில் கணக்கு உள்ளது என்றால் ICICI , கனரா வங்கி மற்றும் SBI வங்கியில் இருந்தது. SBI தவிர மற்ற வங்கியில் கடந்த ஒரு ஆண்டுகாலமாக கனரா வங்கியிலும் 5 ஆண்டுகாலமாக ICICI வங்கியிலும் கணக்கு நடப்பில் இல்லை. 2017

ம் ஆண்டு எனக்கு ICICI வங்கியில் கணக்கு நடப்பில் இருந்ததா என்றால் சாட்சி நினைவில்லை என்கிறார். தற்போது SBI வங்கியில் மட்டும் தான் கணக்கு நடப்பில் உள்ளது. 2019 – 2020 நிதியாண்டு கணக்கு மற்றும் 2020 – 2021 நிதியாண்டு கணக்கு வரவு செலவுகணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும் என்றால் முடியும். நான் ஓய்வுபெறுவதற்கு முன்பு வருமானவரி கணக்கு செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். ஓய்வுபெற்றபின்பு வருமானவரி கணக்கு செலுத்தினேனா என்றால் இல்லை. 2019 – 2020 ஆண்டுகளில் என்னுடைய மாத ஓய்வுதியம் மாதம் ரூ. 40,000/- வந்திருக்கும், ஆண்டுக்கு 4,50,000/- இருக்கும். ஆனால் எனக்கும் என் மனைவிக்கும் ஆண்டுக்கு ரூ. 400,000/- செலவாகும் மீதமுள்ள பணத்தை பேரன் பேத்திக்கு கொடுப்பேன். நான் வேறு எந்த தொழிலும் செய்யவில்லை வேறு வருமானம் எனக்கு வருகிறதா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு நான் எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 09.02.2020 ல் கொடுத்தேன் (சாட்சி கையில் எழுதிவைத்திருந்ததை பார்த்து தேதி சொல்கிறார் ) 09.02.2020 ல் பணம் கொடுத்தேன் அதிலிருந்து எத்தனை நாட்களுக்கு முன்பு என்னிடம் கடன் கேட்டார் என்றால் ஒரு 6 மாதத்திற்கு முன்பு இருக்கும். பிரதிவாதி ஆரம்பத்தில் 6 மாதத்திற்கு முன்பு ரூ. 1,00,000 கேட்டார் அதிலிருந்து 1 மாதம் கழித்து 1,00,000/- கேட்டார் அதன்பின்பு ரூ. 2 ,00,000/- கேட்டார். 09.02.2020 லிருந்து 6 மாதத்திற்கு முன்பு ரூ. 1,00,000 கொடுத்தேன். அடுத்த ஒரு மாதம் கழித்து ரூ. 1,00,000 கொடுத்தேன் அடுத்த ஒரு மாதம் கழித்து ரூ. 2,00,000/- கொடுத்தேன். 09.02.2020 முன்பு 6 மாதத்திற்கு முன்பு நான் கொடுத்த ரூ. 1,00,000 என் வீட்டில் வைத்து காலை 10.00 க்கு கொடுத்தேன் அப்போது சாட்சியாருமில்லை. அதன்பின்பு கொடுத்த ரூ. 1,00,000 எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்து கொடுத்தேன் அப்போது சாட்சியாருமில்லை. அதன்பின்பு ரூ. 2,00,000 எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் வீட்டில் வைத்து கொடுத்தேன் அப்போது சாட்சியாருமில்லை. முதலில் கொடுத்த ரூ. 1,00,000 வட்டி எவ்வளவு பேசப்பட்டது என்றால் வட்டி பேசவில்லை கைமாற்றாக கொடுத்தேன். அடுத்து கொடுத்த ரூ. 1,00,000 ற்கும் வட்டி இல்லை கைமாற்றாக தான் கொடுத்தேன். கடைசியாக கொடுத்த ரூ. 2,00,000 ற்கும் வட்டி இல்லை கைமாற்றாக தான் கொடுத்தேன். ஆக ரூ. 4,00,000/- த்தையும் வட்டிக்காக கொடுக்கவில்லை என்றாலும் கைமாற்றாக தான் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி விஷயங்களை வழக்கறிஞர் அறிவிப்பிலும் வழக்குரையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்யும் வரை பிரதிவாதி அசல் தொகையை தரவில்லை. 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2020 வரை கொடுத்த பணத்திற்கு ஏன் தரவில்லை என்று கேட்டேனா என்றால் பிரதிவாதி மகன் துபாய்யில் வேலைபார்த்து வந்ததால் உதவிக்காக கொடுத்தேன். நான் வட்டிக்கு என்று பணம் கொடுக்கவில்லை.

அந்த அசல் தொகையை கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன்பிறகுள்ள வட்டியும் சேர்த்து பணம் கேட்டுள்ளேன். வட்டி எவ்வளவு காலத்திற்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 09.02.2020 லிருந்தே வட்டி கேட்டு தாக்கல் செய்துள்ளேன். கடன் கொடுத்தற்கு ஆதாரமாக வங்கி காசோலை கொடுத்தாரா என்றால் சாட்சி நினைவில்லை என்கிறார். பூர்த்திசெய்யப்படாத 20 முத்திரைதாளில் கையொப்பம் செய்து ஆதாரமாக கொடுத்தாரா என்றால் இல்லை. 09.02.2020 ல் ரூ, 4,00,000 கொடுத்ததற்கு என் ஆதாரம் வாங்கினேன் என்றால் புரோநோட்டு வாங்கினேன். அந்த புரோநோட்டு என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சாட்சி ஆமாம் என்கிறார். 09.02.2020 ல் எனக்கு புரோநோட்டு கொடுத்தார் முன்பு கொடுத்த ரூ. 4,00,000 ற்கும் சேர்த்து கொடுத்தார். அன்று என்பது புரோநோட்டு எற்பட்ட 09.02.2020 ல் அசல் தொகை ரூ. 4,00,000 என்று தனியாக எதுவும் கொடுக்கவில்லை. முன்பு கொடுத்த ரூ. 4,00,000 ற்கு தான் புரோநோட்டு எழுதிவாங்கினேன். வா.சா.ஆ. 1 புரோநோட்டு யார் எழுதியது என்றால் சாட்சி புரோநோட்டு வாங்கிபார்த்து அதை எழுதியது உட்பட கையெழுத்து போட்டது கணபதி த/பெ தனவேல் எண் 2 பட்டக்காரதெரு, மன்னார்குடி என்ற நபரை தெரியாது என்கிறார். மேற்படி புரோநோட்டு என்வீட்டில் வைத்து தான் எழுதியது. எழுதிய நபரை எனக்கு தெரியாது. புரோநோட்டு சாட்சி வெங்கடேசன் என்பர் உள்ளார் அவர் யார் என்றால் வாத்தியார் மகன் என்று சொன்னார். வா.சா.ஆ. 1 09.02.2020 ல் எழுதப்படவில்லை என்றாலும் யாராலும் பூர்த்தி செய்யப்படவில்லை என்றாலும் அதில் உள்ள கையொப்பம் பிரதிவாதி கையொப்பம் இல்லை என்றாலும் வா.சா.ஆ. 1 புரோநோட்டு நானே மோசடியாக பூர்த்தி செய்து போலியாக தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் ஓய்வுபெற்ற அரசு ஊழியர். 20,000 மோ அல்லது ரூ2,00,000 மே பணம் கொடுக்கவேண்டும் என்றால் காசோலைமூலமாக தான் தரவேண்டும் என்ற சட்ட விதிகள் எனக்கு தெரியும். பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லும் ரூ. 4,00,000 த்தை வங்கிமூலமாக நான் ஏன் கொடுக்கவில்லை என்றால் அந்த சமயத்தில் தன் வங்கி கணக்கில் பணம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். ரூ. 4,00,000 பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்து கொடுத்தேன். கடைசியாக பிரதிவாதிக்கு ரூ. 2,00,000 கொடுத்த சமயம் ரூ. 4,00,000 ரொக்கமாக என் கையில் இருந்தது. சாட்சி அந்த ரூ. 4,00,000 என்பது 6 மாதமாக கொடுத்த தொகைதான் அந்த ரூ. 4,00,000 என்கிறார். பிரதிவாதி அவருக்கு தெரிந்த தோழி மூலம் 15.05.2018 ல் என்னிடம் ரூ. 1,00,000 கடனாக பெற்றது உண்மை என்றும் அவ்வாறு பெற்ற தொகையிலிருந்து மாதம் வட்டி ரூ. 5000/- என்றும் அதற்கு அசலில் 5000/- என்று செலுத்தவேண்டும் என்று நான் நிபந்தனை செய்தேன் என்றும் அந்த நிபந்தனையின் பேரில் பூர்த்தி செய்யப்படாத முத்திரைதாளில் கையொப்பமிட்டு அதனை தொடர்ந்து

18.06.2018 முதல் 20.06.2020 வரை ரூ. 10,000 என்றும் ரூ. 1,80,000 நான் உளவடைத்துகொண்டேன் என்றும் அவ்வாறு உளவடைத்துகொண்டும் பிரதிவாதியின் மகன் வெளிநாட்டில் இருப்பதால் மேலும் துர்லாபம் பெறவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதிக்கு ரூ. 4,00,000 கடன்கொடுத்தது போலவும் அதற்கு ரூ. 1.5 பைசா வட்டியாக கொடுக்கவேண்டும் என்பது போலவும் ஒரு புரோநோட்டு போலியாக தயாரித்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததற்கு வேறு எந்த சாட்சியும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் என் சார்ப்பில் வேறு எந்த சாட்சியும் விசாரிக்கபோவதில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுப்பது தொடர்பாக தனியாக நோட்டு புத்தகம் பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. நான் பலநபர்களுக்கு கடன்கொடுத்த கந்துவட்டி பெற்று அதை நோட்டு புத்தகத்தில் பதிவு செய்துவருகிறேன் என்றும் அந்த நோட்டு புத்தகங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் கந்துவட்டி பெற்றுவருவது தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா. ஆ. 1 புரோநோட்டில் பிரதிவாதி 2 இடத்தில் கையெழுத்து பேட்டார். புரோநோட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதி கையொப்பம் இல்லை என்றும் அவருடைய கையெழுத்தை கையெழுத்து பரிசோதனைக்கு அனுப்பிபார்க்கலாமா என்றால் சாட்சி பார்க்கலாம் என்கிறார். நான் சொல்வதுபோல் பிரதிவாதிக்கும் எனக்கு பணபரிமாற்றம் நடைபெறவில்லை என்றாலும் பொய்யான வழக்கை இட்டுகட்டி பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சார்பு நீதிபதி,

மன்னார்குடி